DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate At Oddanchatram

Case No : DVOP 2/2022

Petitioner Witness : RW1

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | ராஜேஸ் | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | வேலுச்சாமி | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 12 /09/2024

**மனுதார் தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் 12ம் வகுப்பு வரை படித்துள்ளேன். திருவண்ணாமலையில் நான் குடியிருக்கும் வீடு சொந்த வீடா என்றால் ஆமாம். அது ஒரு மாடி வீடு ஆகும். நான் கார் வைத்துள்ளேனா என்றால் வைத்துள்ளேன். வீட்டை தவிர நான் திருவண்ணாமலையில் சொத்து வைத்துள்ளேனா என்றால் ஒரு பிளாட் ஒன்று உள்ளது. எனக்கு சொந்த ஊர் அரவக்குறிச்சி தாலுகா, பள்ளப்பட்டி ஆகும். எனக்கு விவசாய பூர்வீக இடம் எதுவும் இல்லை. குப்பணகவுண்டர் மகன் ரெங்கசாமி எனது தாத்தா ஆவார். அவர் இறந்துவிட்டார். எனது அப்பா தற்போது உயிருடன் இல்லை. என்னிடம் காட்டப்படும் பட்டா எண் 303 வேலம்பாடி கிராமம், அரவக்குறிச்சி தாலுகா எனது தாத்தா பெயரில் உள்ள பட்டா ஆகும். அந்த நிலம் முழுவதும் கோவிலுக்கு சொந்தமானது என்று அறிவித்துவிட்டார்கள். பட்டா எண் 210 மற்றும் பட்டாஎண் 559 மேற்படி கிராமம் அதில் உள்ள பூர்வீக சொத்துக்கள் என்று சொன்னால் அந்த சொத்துக்களை கோவில் சொத்து என்று அறிவித்துவிட்டார்கள். நான் எண்டர் பிரைசஸ் வைத்துள்ளேன். சுலப தவணையில் பொருள் கொடுத்துவிட்டு அதற்கு பணம் பெற்றுக்கொள்வது தான் மேற்கொண்டு வருகிறேன். எனது மகனுக்கு பள்ளி செல்வதற்கு நான் பள்ளிக்கட்டணம் செலுத்தவில்லை. எனது மனைவி எனதுமகன் ஒரு மாத காலம் கர்ப்பமாக இருந்த போதே பிரிந்து சென்றுவிட்டார். அதனால் செலுத்தவில்லை. நான் குடும்ப செலவிற்காக ஒன்றாக வசித்து வரும்போது எவ்வளவு பணம் கொடுத்தேன் என்றால் பொருட்களை நானே வாங்கிக்கொடுத்துவிடுவேன். நான் எனது மனைவிக்கு தனிப்பட்ட செலவிற்காக பணம் கொடுக்கவில்லை என்றால் நானே அனைத்து செலவுகளையும் கவனித்து வந்தேன். எனது மனைவியுடன் நான் சேர்ந்து வாழ முயற்சி செய்தேன். விவாகரத்து கேட்டு நான் தான் மனு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். எனது மகனை நான் அடிக்கடி பார்த்து பேசுகிறேனா என்றால் என்னை எனது மகனுடன் போனில் பேச கூட அனுமதிக்கவில்லை. எனது மகனை பார்த்து பேசவேண்டும் என்று நான் நீதிமன்றத்தில் மனு எதுவும் தாக்கல்

செய்யவில்லை. திருமணத்தின் போது எனக்கு மூன்று பவுன் செயின் போட்டார்கள். மனுதாரருக்கு என்ன நகை போட்டார்கள் என்றால் 6 பவுனில் நெக்லஸ் போட்டார்கள். திருவண்ணாமலையில் ஒன்றாக ஆறு மாதங்கள் வசித்து வந்தோம். மனுதாரர் என் மீது ஒட்டன்சத்திரம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்து இருந்தார் என்றால் சரிதான். நான் விவாகரத்து வழக்கு தாக்கல் செய்த பின்பு தான் எதிர்வினை ஆற்றுவதற்காக புகார் கொடுத்து இருந்தார். மனுதாரர் என் மீது ஒட்டன்சத்திரம் காவல்நிலையத்தில் பணம் மற்றும் நகைகளை திருப்பி கொடுக்க கேட்டும் சேர்ந்து வாழ கேட்டும மனு கொடுத்து இருந்தார் என்று சொன்னால் சரிதான். காவல்நிலையத்தில் ஆஜராகி சேர்ந்து வாழ கேட்ட போது விசாரணைக்கு வரமறுத்துவிட்டார். எனது மனைவி என்னுடன் சேர்ந்து வாழ கேட்டு வழக்கு தாக்கல் செய்து இருந்தார் என்றால் சரிதான். நான் காவல்நிலையத்தில் ஆஜராகவில்லை என்பதால்தான் காவல்நிலையத்தில் மனு முடித்துவைக்கப்பட்டது என்றால் சரியல்ல. (நீதிமன்ற நேரத்தை அனுசரித்து குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

P K DHAMAYANTHI
Digitally signed by P K DHAMAYANTHI
Date: 2024.09.12 17:23:53 +0530

Judicial Magistrate
Oddanchatram.
Date : 12/09/2024